**இரத்தினபுரி பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினபுரி பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் இரத்தினபுரி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முத்திரை கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்களின் குறை பட்டியலிடல் ரூபாய்.22,412,447 மற்றும் மிகைப் பட்டியலிடல் ரூபாய்.13,789,042 ஆகியவற்றுக்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டியிராமையால் திரண்ட நிதியத்திற்கு ரூபாய்.8,623,405 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டது. | எதிர்வரும் வருடத்தில் திருத்தப்படும் என்பது. | கணக்குகள் திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய அடட்டு செலவினம் ரூபாய்.137,008 கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தில் திருத்தப்படும் என்பது. | கணக்குகள் திருத்தப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது கைதவிர்க்கப்பட்ட நடைமுறை அல்லாத சொத்துக்களின் கிரயம் சொத்துக்களின் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தில் திருத்தப்படும் என்பது. | கணக்குகள் திருத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 06 கணக்கு விடயங்களின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதி மற்றும் பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரமான மீதி ஆகியவற்றிற்கிடையே ரூபாய்.5,542,498 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | நீண்ட காலமாக காணப்படும் இணக்கமின்மைகளை இனங்கண்டு திருத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றமை. | வேறுபாட்டுக்கான காரணங்களை இனங்கண்டு தீர்ப்பனவு செய்ய வேண்டும். |

### 1.6.2 கணக்காய்வுக்கான எழுத்துமூலச் சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபாய்.94,071,961 கூட்டுத்தொகையான 12 கணக்கு விடயங்களுக்காக விரிவான பட்டோலைகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் முன்வைக்கப்படவில்லை. | சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அக் கணக்குகளை நாளது வரையாக்குவதற்கு உரிய அறிவுரைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமை. | விரிவான பட்டோலைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,425,476 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,402,031 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,539,784 | 1,279,385 | 1,274,251 | 66,110 | 2,054,234 | 2,761,069 | 2,754,211 | 62,532 |
| வாடகை | 760,000 | 52,145 | 52,145 | - | 610,300 | 147,400 | 147,400 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,672,200 | 1,112,750 | 1,112,750 | - | 1,713,950 | 939,325 | 939,325 | - |
| ஏனைய வருமானங்கள் | 2,928,000 | 2,083,795 | 2,089,586 | | | 2,455,720 | 2,450,270 | 5,791 |
| | 7,899,984 | 4,528,075 | 4,528,732 | - | 3,545,000 | 6,303,514 | 6,291,206 | 68,323 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 03 வருடங்களை விட பழமையான ரூபாய்.28,374 தொகையான ஏக்கர் வரி மற்றும் 04 வருடங்களை விட பழமையான முச்சக்கர வண்டி கட்டணங்கள் ரூபாய்.258,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏக்கர் வரி நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது மற்றும் செயற்பாட்டில் உள்ள முச்சக்கர வண்டி அங்கத்தவர்கள் மாத்திரம் அங்கத்துவ கட்டணம் செலுத்தியுள்ளமை. | நிலுவை வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | துண்டுகளாகப்பட்டு விற்பனை செய்யப்படும் காணிகளின் பெறுமதில் 01 சதவீதமான வரி விற்பனையாளரிடமிருந்து சபைக்கு கிடைக்கும் வகையில் உடன்படிக்கை கைச்சாத்திடாது 03 காணி ஏலங்களுக்காக துண்டாடல் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே காணி பதிவு செய்யும் அலுவலகத்தின் காணிகளை விற்பனை செய்வதற்குரிய தகவல்களை பெற்றுக் கொண்டு அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் அந்த குறைபாட்டினை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் தற்போது விற்பனை செய்யப்பட்டுள்ள காணிகள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொண்டு கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது | சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானங்களை சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகார பிரதேசத்தினுள் வருடாந்தம் சுமார் 09 மெட்ரிக் தொன் அளவான திண்ம கழிவு கொட்டப்படுவதுடன் சபைக்கு சொந்தமான முறையான கழிவு முகாமைத்துவ நடைமுறை ஒன்று காணப்படாத காரணத்தால் உக்கும் கழிவுகளை சேர்த்து இரத்தினபுரி மாநகர சபையின் கழிவு நிலையத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | சேகரிக்கப்படும் உக்கும் கழிவுகளை இடுவதற்கான காணியொன்று இனங்காணப்பட்டு எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | திண்மக்கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் ஒன்று திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி சுற்றறிக்கையின் மூலம் அரச செலவினங்கள் பாரிய அளவில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கொக்கல சுற்றுலா விடுதியில் தங்கி பயிற்சி பெறும் நிகழ்ச்சி திட்டம் ஒன்றினை நடத்துவதற்கு ரூபாய்.350,000 செலவிடப்பட்டிருந்தது. அந்த கொடுப்பனவினுள் 19 பேரின் உணவு மற்றும் தங்குமிடம் ஆகியவற்றுக்கு தவறுதலாக ரூபாய்.142,500 செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த கொடுப்பனவு தொடர்பில் பரிசோதித்து தவறுதலான கொடுப்பனவுகள், பொறுப்பு கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்காக மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து ஆலோசனை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டில் சபையினால் முறையற்ற விதத்தில் தனியார் காணி ஒன்றின் ஊடாக வீதி ஒன்றை நிர்மாணித்தமைக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளின் தீர்ப்பாக முறைபாட்டாளருக்கு அக்காணியின் தெளிவான உரித்தினை மீள வழங்கியிருந்ததுடன் நட்ட ஈட்டுத் தொகை, வழக்கு கட்டணம் மற்றும் வழக்கறிஞர் கட்டணங்களாக ரூபாய்.479,505 தொகையினை செலுத்துவதற்கு 2022 ஆம் ஆண்டில் சபைக்கு நேர்ந்திருந்தது. | வழக்குகளின் தீர்ப்பிற்கமைய செலுத்துவதற்கு நேர்ந்த தொகை பொறுப்பு கூற வேண்டிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு இறுதி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளமை மற்றும் வழங்கப்பட்டுள்ள காலப்பகுதியினுள் குறித்த பணம் செலுத்தப்படாதிருப்பின் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசித்துள்ளமை. | பொறுப்பு கூற வேண்டிய தரப்பினரை நிர்ணயித்து குறித்த தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 வாகன நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட முடியாத நிலையில் காணப்பட்ட 08 வாகனங்கள் மற்றும் 04 உழவு இயந்திரத்துக்கான ரெய்லர்கள் ஆகியவற்றின் கைதவிர்ப்பு நடவடிக்கைகள் 2022 டிசம்பர் மாதம் வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | கைதவிர்க்க கூடியவையாக இனங்காணபட்ட வாகனங்கள் விலை கேள்வி விடுக்கப்பட்ட போதிலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிராமையால் மீண்டும் விலை மனு கோருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமை. | 05/2020 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ரூபாய்.972,700 தொகையான வாகன பழுதுபார்த்தல் செலவினத்திற்காக தகைமை வாய்ந்த | பழுதுபார்த்தல்கள் குறித்த முகவர் நிறுவனத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் மீண்டும் இயந்திரப் | 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கமை |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரப்பொறியியலாளர் ஒருவரின் அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொறியியலாளருக்கு அனுப்பப்படவில்லை என்பது. | ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | எரிபொருள் கட்டளைகளுக்கு அமைய 03 சந்தர்ப்பங்களில் வாகனம் ஒன்றிற்கு இடப்பட்ட 120 லீட்டர் எரிபொருள் அதன் கொள்ளளவினையும் விஞ்சி இருந்தமையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபாய்.35,053 மற்றும் டீசல் கப் வண்டி ஒன்றுக்காக ரூபாய்.12,600 தொகைக்கு 30 லீட்டர் பெட்ரோல் விநியோகிக்கப்பட்டிருந்தமை தவறுதலான கொடுப்பன ஒன்றாகும். | தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு தலைவரால் எரிபொருள் ஒதுக்கமொன்று பேணி செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை மற்றும் 30 லீட்டர் பெட்ரோலுக்கு செலவிடப்பட்ட தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தவறான கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | தலைவரால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பெறுகை நடைமுறையில் இருந்து விலகி வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கப் வண்டி ஒன்றுக்காக ரூபாய்.87,545 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | கூடுதலாக செலுத்தப்பட்ட தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | தவறுதலான கொடுப்பனவுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |